***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT Mannargudi***
***CC.No. 188/2026 – P.W. 1 (LW-2)***

| | |
|---|---|
| *Name* | திரு. பூபேஷ் (தலைமை காவலர்) |
| *Father's Name* | தேவேந்திரன் |
| *Village* | பரவாக்கோட்டை காவல் நிலையம் |
| *Age* | *44* |

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 13.03.2026*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் பரவாக்கோட்டை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 01.02.2026-ஆம் ஆண்டு நான் பரவாக்கோட்டை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்த போது மதுவிலக்கு சம்மந்தமாக எங்கள் சரகத்திற்கு உட்பட்ட பகுதியில் ரோந்து பணியில் காவல் உதவி ஆய்வாளர் திரு.உதயகுமார் மற்றும் தலைமை காவலர் திரு.கார்த்திகேயன் ஆகியோர்களுடன் நானும் கண்காணித்து வந்தபோது, உதவி ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவலின்படி சம்மபட்டி குடிக்காடு ஐய்யனார் குளம் அருகில் நின்றுக்கொண்டிருந்த ஒரு நபர் எங்களை கண்டதும், ஒரு நபர் எத்தனித்து ஓடியவரை மடக்கி பிடித்து விசாரிக்க அவர் தனது பெயர் சுப்பையன் மகன் அசோகன் என்று கூறினார். (**சாட்சி கூண்டிலிருக்கும் ஆஜர் எதிரியை அடையாளம் காட்டுகிறார்**)

2. மேற்படி காவல் உதவி ஆய்வாளர் ஆஜர் எதிரியை சோதனை செய்து பார்த்தபோது, டாஸ்மாக் 180 ml Mens Club பிராந்தி என்று லேபில் ஒட்டப்பட்ட 26 பிராந்தி அரசு மதுபான பாட்டில்கள் இருந்தது. அதைப்பற்றி காவல் உதவி ஆய்வாளர் எதிரியிடம் விசாரித்தபோது அதிக விலைக்கு விற்பதற்காக வைத்திருப்பதாகவும், அதற்கான அரசு அனுமதியோ, உரிமமோ இல்லை என்று கூறினார். மேற்படி காவல் உதவி ஆய்வாளர் எதிரியை அதே இடத்தில் குற்றக் காரணம் கூறி 14.30 ணியளவில் கைது செய்து ஆஜர் எதிரியிடமிருந்து ஆஜர் எதிரி வைத்திருந்த தடயப் பொருட்களை மகசரில் 14.45 காவல் உதவி ஆய்வாளர் கைப்பற்றினார். தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராத காரணத்தினால் காவல்

உதவி ஆய்வாளருடன் சென்ற நானும் தலைமை காவலர் திரு.கார்த்திகேயன் என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். (**கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ-1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

3. . பின்னர் உயர் அதிகாரியின் உத்தரவின்படி உதவி ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் தடயப் பொருட்களை 15.00 மணியளவில் அழித்து அழிப்பு மகசர் தயார் செய்தார். அதிலும் நாங்கள் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் அழிப்பு மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். (**அழிப்பு மகசர் அ.சா.ஆ-2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பின்னர் எதிரி மற்றும் மகசருடன் நிலையம் வந்து எதிரியின் மீது நிலையக் குற்ற எண்.10/2026 சட்டப்பிரிவு 4(1)(C) TNP Amended Act-ன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இவ்வழக்கின் புகார்தாரரான காவல் உதவி ஆய்வாளர் என்னுடைய மேல் அதிகாரி என்றால்-சரிதான். இவ்வழக்கில் தனிநபர்கள் யாரும் சாட்சியம் அளிக்க முன்வரவில்லை என சொல்லியுள்ள நிலையில் காவல் உதவி ஆய்வாளர் தனி நபருக்கு அழைப்பாணை எதுவும் கொடுத்தாரா என்றால்-இல்லை. இவ்வழக்கில் காவல் உதவி ஆய்வாளர் தான் தடயப் பொருட்களை அழித்தார் என்றால்-சரிதான். இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட மதுபாட்டில்களிலிருந்து பகுப்பாய்வுக்காக காவல் உதவி ஆய்வாளர் பிரித்து எடுத்தாரா என்றால்-இல்லை. புள்ளி விவர கணக்கிற்காக போடப்பட்ட பொய் வழக்கில் எனது உயர் அதிகாரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால்-சரியல்ல.

(ஒம்/-) ஆ.சீதாலெட்சுமி 13.03.2026

நீதித்துறை நடுவர் எண்.2,

மன்னார்குடி.

***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT Mannargudi***
***CC.No.188/2026 – P.W. 2 (LW-3)***

| | |
|---|---|
| *Name* | திரு. உதயகுமார் (காவல் உதவி ஆய்வாளர்) |
| *Father's Name* | கோவிந்தராஜ் |
| *Village* | பரவாக்கோட்டை காவல் நிலையம் |
| *Age* | *52* |

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 13.03.2026*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் பரவாக்கோட்டை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 01.02.2026 ஆம் ஆண்டு நான் பரவாக்கோட்டை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது மதுவிலக்கு சம்மந்தமாக எங்கள் காவல் சரகத்திற்கு உட்பட்ட பகுதியில் ரோந்து பணியில் என்னுடன் தலைமை காவலர்கள் திரு. பூபேஷ் மற்றும் திரு.கார்த்திகேயன் ஆகியோர்களுடன் கண்காணித்து வந்தபோது, எனக்கு கிடைத்த ரகசிய தகவலின்படி சம்மபட்டிகுடிக்காடு ஐய்யனார் குளம் அருகில் நின்றுக்கொண்டிருந்த ஒரு நபர் எங்களை கண்டதும், ஒரு நபர் எத்தனித்து ஓடியவரை மடக்கி பிடித்து விசாரிக்க அவர் தனது பெயர் சுப்பையன் மகன் அசோகன் என்று கூறினார். **(சாட்சி கூண்டிலிருக்கும் ஆஜர் எதிரியை அடையாளம் காட்டுகிறார்)**

2. மேலும், நான் ஆஜர் எதிரியை சோதனை செய்து பார்த்தபோது, டாஸ்மாக் 180 ml Mens Club பிராந்தி என்று லேபில் ஒட்டப்பட்ட 26 பிராந்தி அரசு மதுபான பாட்டில்கள் இருந்தது. அதைப்பற்றி நான் எதிரியிடம் விசாரித்தபோது அதிக விலைக்கு விற்பதற்காக வைத்திருப்பதாகவும், அதற்கான அரசு அனுமதியோ, உரிமமோ இல்லை என்று கூறினார். நான் எதிரியை அதே இடத்தில் குற்றக் காரணம் கூறி 14.30 மணியளவில் கைது செய்து ஆஜர் எதிரியிடமிருந்து ஆஜர் எதிரி வைத்திருந்த தடயப் பொருட்களை மகசரில் 14.45 கைப்பற்றினேன். தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராத காரணத்தினால் என்னுடன் வந்த தலைமை காவலர்கள் திரு. பூபேஷ் மற்றும் திரு.கார்த்திகேயன் ஆகியோர்களிடம் சாட்சிகளாக

சாட்சி கையொப்பம் பெற்றேன். என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசர் என்னால் தயார் செய்யப்பட்டதுதான் **(கைப்பற்றுதல் மகசர் ஏற்கனவே அ.சா.ஆ-1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது).**

3. பின்னர் உயர் அதிகாரியின் உத்தரவின்படி நான் மேற்படி அதே சாட்சிகளின் முன்னிலையில் தடயப் பொருட்களை 15.00 மணியளவில் அழித்து அழிப்பு மகசர் தயார் செய்தேன். அதிலும் மேற்படி சாட்சிகளிடம் சாட்சிகளாக கையொப்பம் பெற்றேன். என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் அழிப்பு மகசர் என்னால் தயார் செய்யப்பட்டதுதான். **(அழிப்பு மகசர் ஏற்கனவே அ.சா.ஆ-2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது).** பின்னர் நான் எதிரி மற்றும் மகசருடன் நிலையம் வந்து எதிரியின் மீது நிலையக் குற்ற எண்.10/2026 சட்டப்பிரிவு 4(1)(C) TNP Amended Act-ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

4. பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 மற்றும் 2 ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எதிரியை நிலைய பிணையிலேயே விடுவித்துள்ளேன்.

5. இத்துடன் எனது புலன்விசாரணை முடித்து வழக்கு சம்பவம் உண்மையென தெரியவரவே எதிரியின் செய்கையானது சட்டப்பிரிவு 4(1)(C) TNP Amended Act ன் தண்டிக்கத்தக்க குற்றம் என்று கடந்த 01.02.2026 -ம் தேதியன்று எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இவ்வழக்கில் தனிநபர்கள் யாரும் சாட்சியம் அளிக்க முன்வரவில்லை என சொல்லியுள்ள நிலையில் உதவி ஆய்வாளர் தனி நபருக்கு அழைப்பாணை எதுவும் கொடுத்தாரா என்றால்-இல்லை. இவ்வழக்கில் தமிழ்நாடு மதுவிலக்குஅமல் சட்டப்பிரிவு 32 ல் சொல்லப்பட்டுள்ள வழிமுறைகளின் படி தடயப்பொருள் அழிக்கப்பட்டது குறித்த விவரம் எதுவும் தங்கள் கோப்பில் உள்ளதா என்றால் இல்லை. இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட மதுபாட்டில்களிலிருந்து பகுப்பாய்வுக்காக உதவி ஆய்வாளர் பிரித்து எடுத்தாரா என்றால்-இல்லை. புள்ளி விவர கணக்கிற்காக போடப்பட்ட பொய் வழக்கில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால்-சரியல்ல.

(ஒம்/-) ஆ.சீதாலெட்சுமி 13.03.2026

நீதித்துறை நடுவர் எண்.2,

மன்னார்குடி.